# Asylum Advice

## முடிவுகளுக்குப் பின்னர் நிராகரிப்பு

# 4டீ: முடிவுகளுக்குப் பின்னர் நிராகரிப்பு

உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டால் என்ன நடக்கம் என்பதை இப்பகுதி விளக்குகிறது உங்கள் புகலிடக் கோரிக்கை தொடர்பில் கேள்விகள் இருந்தால் உங்கள் சட்ட ஆலோசகருடன் பேச வேண்டும். அவர் ஆலோசனை வழங்க முடியும்.

## 4B.1 ஒரு நிராகரிப்பின் பின் உள்ள தெரிவுகள்

உங்களின் புகலிட நேர்காணலின் பின் உங்கள் கோரிக்கையை Home Office நிராகரிக்க முடிவு செய்யலாம் Home Office இன் இம்முடிவை எதிர்த்து நீங்கள் மேன் முறையீடு செய்யலாம். Home Office உங்கள் கோரிக்கையை நிராகரித்தால் அதற்கான காரணங்களை விளக்கி கடிதம் அனுப்புவார்கள் இக்கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும். தேவை எனின் இதன் உள்ளடக்கம் பற்றி உங்கள் சட்ட ஆலோசகருடன் உரையாட வேண்டும். புகலிடம் அல்லது மனிதபிமானப் பாதுகாப்பு வழங்குவதற்கான காரணங்கள் ஏன் உங்களிடம் இல்லை என Home Office நம்புகிறார்கள் என்பதை இக்கடிதம் எடுத்துக் கூறும். இந்நிலையில் உங்கள் முன் உள்ள தெரிவுகளை கவனமாக பரிசீலிக்க வேண்டும்.

பின்வரும் தெரிவுகள் உங்களுக்கு உண்டு

- Home Office இன் முடிவினை எதிர்த்து நீங்கள் மேன்முறையீடு செய்யலாம். இதன் அர்த்தம் என்னவென்றால் Home Officeஇ இல் இல்லாமல் சுயாதீனமாகச் செயல்படும் நீதிபதி ஒருவரை இம்முடிவை பரிசீலித்து இம் முடிவை ஏற்றுக்கொளிகின்றனரா எனத் தீர்மானிக்கம் படி நீங்கள் கேட்கலாம்.( இது பற்றி உங்கள் சட்ட ஆலோசகருடன் நீங்கள் உரையாட வேண்டும். Home Office இன் முடிவனை எதிர்த்து மேன்முறையீடு செய்வதற்கு இறுக்கமான காலக்கெடு உள்ளது என்பதை தயவு செய்து கவனிக்கவும்
- உங்களுக்கு “அத்தாட்சிப் பட்ட நிராகரிப்பு” கிடைத்தால் மேன்முறையீடு செய்வதற்கு தானாகவே உரிமை கிடைக்காது இருப்பினும் நீங்கள் ஒரு நீதிமன்ற மீள்பார்வைக்கு விண்ணப்பிக்கலாம் இது பற்றி உங்கள் சட்ட ஆலோசகருடன் நீங்கள் உரையாட வேண்டும். நீதிமன்ற மீள்பார்வைக்கு உங்கள் சட்ட ஆலோசகரால் அதற்கான காரணங்கள் இருந்தால் மட்டும் விண்ணப்பிக்க முடியும்
- மேன்முறையீடு செய்ய விரும்பவில்லை என்றால் Assisted Voluntary Return scheme (AVR) தான் ஐக்கிய ராச்சியத்தை (UK) விட்டு போவதற்கு மிகப் பொருத்தமான திட்டமாக இருக்கும் AVR திட்டம் ஹோம் ஆபீஸ் ஆல் நடாத்தப்படுகிறது - தயவு செய்து www.gov.uk/return-home-voluntarily Tel: 0300 004 0202 காண்க இல் தொடர்பு கொள்ளலாம்

## 4B.2 நீங்கள் மேன்முறையீடு செய்ய தீர்மானித்தால்

உங்கள் கோரிக்கை Home Office ஆல் நிராகரிக்கப் பட்டு நீங்கள் மேன்முறையீடு செய்ய தீர்மானித்தால் உங்கள் கோரிக்கை நிராகரிக்கப் பட்டு விட்டது என அறிவித்தல் கிடைத்ததும் விரைவாக உங்கள் சட்ட ஆலோசகருடன் தொடர்பு கொள்ள வேண்டும். உங்களை அவர்கள் சந்தித்து உங்கள் நிராகரிப்பைப் பற்றி உரையாடி மேன்முறையீட்டுக்கான அடிப்படைகளை உறுதி செய்ய வேண்டும். சட்ட உதவி (சட்ட ஆலோசனை செலவீனங்களுக்கு உதவி செய்பவர்கள்) யின் கீழ் சட்ட ஆலோசகர் ஒருவர் உங்களை பிரதிநிதிப் படுத்த வேண்டும் என்றால் நீங்கள் குறைந்த வருமானம் உள்ளவர் என்றும் உங்கள் வழக்கு வெற்றி அடைவதற்கு நியாயமான சாத்திங்கள் உண்டு எனக் காட்ட வேண்டும். இதன் அர்த்தம் என்வென்றால் உங்கள் வழக்கு வெற்றியளிக்க 50% அல்லது அதற்கு மேலான சாத்தியம் இருந்தால் மட்டுமே சட்ட உதவி வழங்கப்படும் உங்கள் சட்ட ஆலோசகர் அதனைத் தீர்மானிப்பதற்கு ஒரு சாத்தியம் பற்றி அறியும் சோதனை மேற்கொள்வார். இச் சோதனையில் நீங்கள் தோல்வி அடைந்தால் சட்ட உதவி மறுக்கப் படும்.

## 4B.3 எனக்கு சட்ட உதவி மறுக்கப் பட்டால் ?

உங்களுக் சட்ட உதவி மறுக்கப்பட்டதை மீள் பார்வை செய்யுமாறு நீங்களோ அல்லது உங்கள் சட்ட ஆலோசகரோ கேட்கலாம். சட்ட உதவி மறுப்புக்கு மேன் முறையீடு செய்வது பற்றி உங்கள் சட்ட ஆலோசகரைக் கேட்கவும்.

உங்களால் சட்ட உதவி பெற முடியாமல் உங்கள் சட்ட ஆலோசகர் தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கு வேலை செய்வாராயின் அதற்காக நிங்கள் பணம் செலுத்த வேண்டும். தனிப்பட்ட ரீதியில் அவர்கள் உங்களுக்கு வேலை செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பாக அவர்களின் நிபந்தனைகள் பற்றி உங்களுக்கு விளக்கி நீங்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

உங்களுக்கு சட்'ட உதவி மறுக்கப் பட்டு சட்ட ஆலோசனைக்கான பணத்தையும் உங்களால் கொடுக்க முடியாவிட்டால் நீங்கள் விரும்பினால் உங்களை நீங்களே பிரதிநிதித்துவம் செய்யலாம்.

## 4B.4 மேன் முறையீட்டு விசாரணை

மேன்முறையீட்டு விசாரணைகள் Asylum Immigration Tribunal (AIT).இல் நடாத்தப் படும் உங்கள் மேன்முறையீடு சமர்ப்பிக்கப் பட்ட பின் எந்த நீதி மன்றத்தில் இது நடாத்தப் புடும் என உங்களுக்கு தெரிவிக்கப் படும். இரண்டு நிதிமன்றங்கள் உண்டு ஒன்று First-Tier Tribunal மற்றது Upper Tribunal. புடிவரவு மற்றும் புகலிடத்துக்கென இரு மனறங்கள் தனியாக உள்ளன. UK. இல் பல நீதி மன்றங்கள் உள்ளன First-tier Tribunalஇன் கடமை Home Office செய்த முடிவுகளை எதிர்த்து செய்யப்படும் மேன்முறையீடுகளை விசாரித்து முடிவு செய்தல்

உங்கள் மேன்முறையீட்டு விசாரணைக்கான திகதி நிர்ணயிக்கப் பட்டதும் திகதி,

நேரம் மற்றும் விசாரணை நடைபெறும் இடம் பற்றித் தெரிவிக்கும் கடிதம் உங்களுக்கு கிடைக்கும். Home Office இல் இருந்து உதவி பெறுபவராயின் பயணச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம் பயணச்சீட்டுகளுக்கான கோரிக்கையுடன் விசாரணைக் கடிதத்தின் பிரதி ஒன்றையும் அனுப்ப வேண்டும். முதல் சந்தர்ப்பத்திலேயே இதனை நீங்கள் செய்ய வேண்டும். இதனை செய்ய புகலிட உதவி மையம் உங்களுக்கு உதவும் . உங்களுக்கு உதவி தேவை பட்டால் 0808 8000 630 இக்கு தயவு செய்து அழையுங்கள்

ஒரு குறிப்பிட்ட வழக்கில் எழும் பிரச்சினைகள் சிக்லாக உள்ளது அதனால் அவ்வழக்கு ஒரு Immigration Panel க்கு முன்னால் அல்லது Senior Immigration Judge க்கு முன்னால் விசாரிக்கப்பட வேண்டும் என ஒரு Asylum Immigration Tribunal (AIT) முடிவு செய்யலாம் ( விரிவான விசாரணைக்கு முன்பு எந்த நேரத்திலும்)

விசாரணை நடக்கும் இடத்தை குறைந்தது 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே சென்றடைய வேண்டும். பாதுகாப்பு சோதனைக்கு பின் எந்த அறையில் விசாரணை நடை பெறும் என்பதை கண்டறியுங்கள். விசாரணையின் போது கீழ் கண்டவர்கள் அறையில் இருப்பதைக் காண்பீர்கள்

- குடிவரவு நீதிபதி ஓர் உயர்ந்த மேடையில் அறையின் முன் பகுதியில் அமர்ந்திருப்பார்கள்.அவர்கள் விசாரணையை வழிநடத்துவார்கள். உங்களிடம், உங்கள் சட்ட ஆலோசகரிடம் மற்றும் Home Office Presenting Officer இடம் உங்கள் வழக்கு பற்றி கேள்விகள் கேட்கக் கூடும்
- Home Office Presenting Officer: தங்கள் தரப்பை முன்வைக்கவும் உங்களுக்கு UK. இல் தங்குவதற்கு அனுமதி மறுக்கப் பட்டமைக்கான காரணங்களை விளக்குவதற்கும் Home Office ஒரு பிரதிநிதியை அனுப்பியிருப்பதை காணக் கூடும்
- சாட்சிகள் உங்கள் வழக்கில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட சாட்சிகள்
- நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கேட்டிருந்தால் நீதிபதி கேட்கும் கேள்விகளையும் அதற்கான உங்கள் பதில்களையும் அவர் மொழிபெயர்ப்பார் நீங்கள் கூறுவது அனைத்தையும் அவர் சரியாக மொழி பெயர்த்து வழங்குவதன் மூலம் Home Office நீங்கள் கொடுக்கும் சகல தகவல்களையும் பெற்றுக் கொள்ளும்.

நீங்கள் வழங்கும் தகவல்கள் அனைத்தும் ரகசியமாய் மொழிபெயர்ப்பாளர்களால் பேணப்படும். உங்களுக்கு மொழிபெயாப்பாளருடன் ஏதாவது பிரச்சனை இருந்தால் அல்லது பேசுகின்றது உங்களுக்கு புரியவில்லை என்றால் உங்கள் சட்டஆலோசகரின் அல்லது நீதிபதியின் கவனத்திற்கு முடிந்த அளவுக்கு விரைவாகக் கொண்டுவரவேண்டும். உங்கள் வழக்கின் முடிவை இது எந்தவிதத்திலும் பாதிக்காது

நீதிமன்ற அறைகள் பொதுவான இடங்கள் என்பதால் அங்கு வேறு நபர்கள் இருப்பதை நீங்கள் காணலாம்.

## 4B.5 ஒத்திவைப்புகள்

உங்கள் விசாரணைத் திகதி நிர்ணயிக்கப் பட்டதன் பின் ஆனால் விசாரணைத் தகதிக்கு முன் நீங்களோ அல்லது உங்கள் சட்ட ஆலோசகரோ யுஜவு இடம் ஒத்திவைக்க (பின்போட) வேண்டுகோள் விடுக்கலாம். Case Management Review Hearing. போது இவ் வேண்டுகோளை விடுக்கலாம் உங்கள் மேன்முறையீட்டை வலுப்படுத்த ஆதாரங்களை(வைத்திய அறிக்கைகள் அல்லது வெளிநாட்டில் இருந்து பெறவேண்டிய ஆவணங்கள்) திரட்ட மேலும் காலம் தேவை என நீங்களோ அல்லது உங்கள் சட்ட ஆலோசகரோ வாதிடலாம்

உங்கள் மேன்முறையீட்டு விசாரணையின் போது ஏதாவது விடயம் பற்றி மேலதிக ஆராய்ச்சி தேவை எனின் நீதிபதி, அல்லது உங்கள் சட்ட ஆலோசகர் அல்லது Home Office எவரேனும் ஒத்திவைப்பை கோரலாம்.

நீங்கள் முக்கியம் எனக் கருதும் ஏதாவது ஆவணங்கள் உங்கள் நாட்டில் உள்ளது என்றால் இது தொடர்பாக சட்ட ஆலோசகருடன் விரைவாக பேசவேண்டும். இவ் ஆவணங்களை இங்கு தருவிப்பது உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்துக்கோ பாதுகாப்பானது எனக் கருதுமிடத்தில் இதை ஒழுங்க செய்யும் வரை உங்கள் விசாரணையை தாமதிக்க முடியும்.

நீதிபதி விசாரணையை ஒத்திவைக்க முடிவு செய்தால் புதிய திகதி உங்களுக்கு தரப்பட வேண்டும் ஏதாவது விதிவிலக்கு இல்லை எனின் இது விசாரணை நடந்து 28 நாட்களுக்கு மேலாக இருக்க கூடாது

நிதிபதி ஒத்திவைப்பது இல்லை என முடிவு செய்தால் நிங்கள் நிதிமன்றத்துக்கு வரவேண்டும். நீங்கள் வராவிட்டாலும் உங்கள் பிரசன்னம் இன்றி உங்கள் வழக்கு முடிவு செய்யப் படும்.

## 4B.6 உங்கள் மேன்முறையீட்டு விசாரணையின் போது

நீங்கள் நீதிபதிக்கு முழுமையாகப் பதில்கள் கூற வேண்டும் அத்துடன் எவ்வளவு தகவல்கள் கொடுக்க முடியுமோ அவ்வளவற்றையும் கொடுக்க வேண்டும் நீதிபதி, அல்லது உங்கள் சட்ட ஆலோசகர் Home Office இன் பிரதிநிதி ஆகியோர் உங்கள் வழக்குக்கு சட்டம் எவ்வாறு பிரயோகிக்க வேண்டும் என்பது பற்றி கலந்துரையாடலாம்.

சில விடயங்கள் பற்றி குறிப்பாக தனிப்பட்ட உணர்ச்சி வசப்படக் கூடியவை பற்றிபு பேசுவதை நீங்கள் விரும்பாமல் இருக்கலாம்.. ஆனால் பேசுவதற்கு கடினமான விடயங்கள் பல சமயங்களில் உங்கள் கோரிக்கைக்கு முக்கிய ஆதாரமாக இருக்கும். உங்களால் கொடுக்க முடிந்த சகல தகவல்களும் நீங்கள் பாதுகாப்பு கோருவதற்கான காரணங்களை சரியாக நீதிபதி விளங்கிக்கொள்ள உதவியாக இருக்கும்.

உங்களுக்கு என்ன நடந்தது அத்துடன் ஏன் உங்களுக்கு பாதுகாப்பு தேவை என்பது பற்றி உங்களால் முடிந்த சகல தகவல்களையும் வழங்குவதுடன் உண்மையைக’

கூறுவதும் மிகவும் அவசியம்.

உங்கள் விசாரணை முடிந்ததும என்ன முடிவை நீதிபதி எட்டியுள்ளார் என்பது உங்களுக்கு தெரிய வராது உங்கள் ஆவணங்கள் அனைத்தையும் நீதிபதி தன்னுடன் எடுத்துச் சென்று பார்வை இட்டபின்னர் முடிவு செய்வார் அந்த முடிவு உங்களுக்கு அனுப்பி வைக்கப் படும்

"அகதிகளுக்கான கொள்கைகள;" மற்றும் "மனித உரிமைகளுக்கான ஐரோப்பியக் கொள்கைகள;" இவற்றை உங்களின் கோரிக்கைக்கான சூழலுக்குப் பிரயோகித்து உங்கள் விண்ணப்பத்தை நீதிபதி பரிசீலனை செய்வார். நிங்கள் UK. இல் தங்குவதற்கான காரணங்கள் உள்ளனவா என அவர்கள் பார்ப்பார்கள்

நீதிபதி உங்களுக்கும் ( உங்கள் சட்ட ஆலோசகருக்கும் ) மற்றம் Home Office க்கும் தீமானத்தின் (முடிவு) பிரதியை அனுப்புவார் உங்களைத் தங்குவதற்கு அனுமதிப்பதற்கான நிபந்தனைகளை திருப்தி செய்கிறீர்கள் என நீதிபதி நம்புகிறாரா என்பதை இத்தீமானம் உறுதி செய்யும். அவரோ அவளோ ஒன்றில் உங்கள் மேன்முறைப்பாட்டை ஏற்றுக் கொள்வார் அல்லது நிராகரிப்பார் ( மறுப்பார்) நிதிபதியின் முடிவுக்கான காரணங்கள் இத்தீர்மானத்தில் உள்ளடங்கும்

## 4B.7 முடிவு எடுக்கப் பட்ட பின்

சில சமயங்களில் நீங்களும் Home Office உம் மேன்முறையீடு செய்ய முடியும் நீங்கள் UK இல் தங்கியிருப்பவர் என்றால் காலக்கெடு 10 நாட்கள், தடுப்பில் உள்ளீர்கள் என்றால் மேன்முறையீடு செய்யக் காலக்கெடு 5 நாட்கள் UK க்கு வெளியே உள்ளீர்கள் என்றால் காலக்கெடு 28 நாட்கள் மேன்முறையீடு செய்ய அனுமதி கோரும் விண்ணப்பம் யுளலடரஅ ஐஅஅபைசயவழைெ வுசடைரயெட'ள் ரூீநச வுசடைரயெட. க்கு செய்ய வேண்டும். இந்நிலையில் உங்களுக்கோ அல்லது Home Office க்கோ உங்கள் வழக்கில் சட்டத்தில் ஏதோ தவறு நடந்து உள்ளது என்பதை நிருபிப்பதற்கு அடிப்படைகள் இருந்தால் மட்டுமே  அனுமதி வழங்கப் படும்

இங்கிலாந்தில் Upper Tribunal (Immigration and Asylum Chamber) நீதிமன்றம் இவற்றில் ஈடுபடும். :

- குடிவரவு புகலிடம் மற்றும் தேசியம் ஆகிய விடயங்களில் Upper Tribunal (Immigration and Asylum Chamber)இனால் எடுக்கப் பட்ட முடிவுகளுக்கு எதிரான மேன்முறையீடுகள்
- சில நீதிமன்ற மீள்பார்வைகள் (குடிவரவு)

ஸ்கொட்லாந்தில் உங்கள் வழக்கு Court of Sessions. க்கு முன்பாக விசாரணைக்கு வரும்.

வடஜயர்லாந்தில் Queen's Bench Division.உடன் இது நடைபெறும்

இவ்விடயங்கள் தொடர்பாக உங்கள் சட்ட ஆலோசகர் மேலதிக தகவல்களை வழங்கக் கூடியவராக இருப்பார்.

சில சமயங்களில் மேன்முறையீடு செய்வதற்கு வேறு உரிமைகள் இருக்கலாம் உங்கள் சட்ட ஆலோசகருடன் பேசுங்கள்

சட்ட பிரதிநிதிகள் தேவை பட்டால் - அணுகவும் :

Asylum Advice UK at 0808 8000 642
www.asylumhelpuk.org

உங்களது குடியுரிமை குறித்து எங்களால் எந்த உதவியும் செய்ய இயலாது

## 4B.8 எனது மேன்முறையீட்டுக்கு பின் என்ன நடக்கும்

சாதகமான முடிவு ஒன்றைப் பெறுதல்-உங்கள் வழக்கில் உங்களுக்கு சாதகமான முடிவு ஒன்று கிடைத்து இதனை எதிர்த்து Home Office மேன்முறையீடு செய்யவல்லை என்றால் உங்களுக்கு Home Officeஇல் இருந்து உங்களுக்கு UK.இல் தங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது என உறுதி செய்யும் தகவல் கிடைக்கும்
(தயவு செய்து முடிவுக்கு பின்னரான அனுமதிகளைப் பார்க்க)

மேலும் ஒரு மேன்முறையீடு – நீங்கள் அல்லது முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்து அதற்கு அனுமதி கிடைத்தால் மீள் பரிசீலனைக்கான விசாரணை ஒன்றுக்கு நடுவர் மன்றம் உழுங்கு செய்யும் மனறம் வேறு முடிவு எடுக்கும் வரை நீங்கள் தொடர்ந்தும் ஒரு புகலிடக் கோரிக்கையாளராகவெ இருப்பீர்கள் உங்கள் வழக்கு விசாரிக்கப் பட்ட பின்னர் இது ஒன்றில் ஏற்றுக் கொள்ளப்டலாம் அல்லது நிராகரிக்கப் படலாம்.

மேலும் மேன்முறையீடகள் இல்லை – நீதிமன்றத் தீர்ப்பின் பின், மேன்முறையீடு செய்வதற்கு அடிப்படைகள் இல்லாவிட்டால் அல்லது மேலும் அனுமதி மறுக்கப் பட்டால் அப்போ நீங்கள் 'Appeal Rights Exhausted (ARE)'என கருதப் படுவீர்கள். இதன் அர்த்தம் உங்கள் புகலிடக் கோரிக்கை தோற்று விட்டதால் நீங்கள் புகலிடம் தேடுபவர் ஆக இருக்க மாட்டீர்கள் வேறு மேன்முறையீடகள் நிலுவையில் இல்லை என்றால் UK ஐ விட்டு வெளியேறுவதை Home Office எதிர்பார்க்கும்

UK ஐ விட்டு வெளியேறுவதை Home Office எதிர்பார்க்கும் உங்களுக்கு

- புகலிடம் மறுக்கப் பட்டு அனுமதியும் மறுக்கப் பட்டால்
- மேன்முறையீட்டு நடவடிக்கையின் இறுதிளை அடைந்து விட்டால். அல்லது
- உங்கள் புகலிட விண்ணப்பத்தை மீளப் பெற்றால்

## 4B.9 சுயவிருப்பத்தின் அடிப்படையில் UK ஐ விட்டு வெளியேற நான் விரும்பினால்

நீங்கள் வீடு திரும்ப விரும்பினால் உங்களுக்கு உதவ இரண்டு தெரிவுகள் உள்ளன.

1) ஹோம் ஆபீஸ் - அவர்களை தொடர்புகொள்ளவும் மேலும் விபரங்கள் அறிந்துகொள்ள www.gov.uk/return-home-voluntarily , சுயமாக திரும்பும் குழு 0300 004 0202 ஊடாக நீங்கள் Voluntary Return (AVR) க்கு விண்ணப்பிக்கலாம்

2) நீங்களாகவே உங்கள் பயண ஒழுங்குகளை செய்யலாம். வெளியேறுவதற்கு முன்பாக உங்கள் கடவுச்சீட்டு மற்றும் வேறு பயணம் சம்பந்தமான ஆவணங்ஙகளை திருப்பி பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு உங்கள் பயணத்தை உறுதி செய்வதற்கு முன்னதாக Home Office ஐ தொடர்பு கொள்ள வேண்டும்

## 4B.10 யுஏசு என்றால் என்ன?

The Assisted Voluntary Return (AVR) திட்டம் ஹோம் ஆபீஸ் திட்டத்தினால் நடாத்தப் படுகிறது இதனால் உங்கள் பூர்வீக நாட்டுக்கு அல்லது உங்களுக்கு அங்கு வசிக்க உரிமை உள்ளது என நிரூபிக்க முடியுமானால் வேறு நாட்டுக்கு திரும்ப உதவி வழங்க முடியும். மேலும் விபரங்கள் அறிந்துகொள்ள www.gov.uk/return-home-voluntarily Tel: 0300 004 0202

## 4B.11 எனது வீட்டில் குழந்தைகள் இருந்தால்

நீங்கள் ஒரு குடும்பத்தின் பகுதியாக இருந்தாலும் அகற்றப் படக் கூடும் உங்களுடனும் உங்கள் குடும்பத்துடனும் உங்கள் முன் உள்ள தெரிவுகள் பற்றி Home Office கலந்துரையாடும் அவர்கள் பின்வரும் தெரிவுகளைப் பார்ப்பார்கள்

சுயமாக திரும்புதளுக்கு உதவி

மேலும் விபரங்கள் அறிந்துகொள்ள www.gov.uk/return-home-voluntarily , சுயமாக திரும்பும் குழு 0300 004 0202

திரும்ப வேண்டிய தேவை
UK விட்டு சுயவிருப்பத்தில் நீங்கள் வெளியேறா விட்டால் Home Office நீங்கள் திரும்ப வேண்டிய தேவை பற்றி உங்களுக்கு கடிதம் எழுதுவார்கள் இரண்டு வாரங்களுக்குள் நாடு திரும்புமாறு அறிவித்தல் உங்களுக்கு கிடைக்கும். உங்களையும் உங்கள் குழந்தைகளையும் நாடு திரும்ப தயார் படுத்திக் கொள்ள வேண்டும்
நீங்கள் நாடு திரும்புவதை நீஙகளாகவே முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் அனேகமாக இருக்கும்.

உறுதிப்படுத்தப் பட்ட நாடு திரும்புதல்
நீங்கள் நாடு திரும்புதலுக்கான எல்லா வழிகளும் தோல்வி அடைந்தால் உறுதிப்படுத்தப் பட்ட நாடு திரும்புதல் உபயோகிக்கப் படும் உறுதிப்படுத்தப் பட்ட நாடு திரும்புதல்

கட்டத்தை நீங்கள் அடைந்தால் உங்கள் விடயத்தை சுயாதீனமாக இயங்கும் குடும்பங்கள் நாடு திரும்புதலுக்கான குழு ஒன்றினால் மீள் பார்வை செய்யப் படும். குழந்தைகளின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு வேறு என்ன பொருத்தமான வழியில் நாடு திரும்பலாம் என இக்குழு ஆலோசனை வழங்கும்

வெயியேற்றத்துக்கு முன் குடும்பங்கள் தங்கும் மையம் ஒன்று Home Office வசம் உள்ளது இது ஊநனயசள என அழைக்கப் படும். இது புயவறiஉம விமான நிலையத்துக்கு அருகாமையில் உள்ளது ஏனைய வழிகள் எல்லாம் தீர்ந்து போய் விட்டது அல்லது பொருத்தமற்றது என குடும்பங்கள் நாடு திரும்புதலுக்கான குழு முடிவு செய்யலாம்.

## 4B.12 நான் நாடு திரும்ப விரும்பவில்லை என்றால் என்ன நடக்கும்

நீங்கள் நாடு திரும்புவதற்கு உதவி செய்ய உள்ள சேவைகள் எதனையும் பாவிக்காவிட்டால் அல்லது UKஇ ஐ விட்டுச் செல்ல முயற்சிகள் எடுக்கா விட்டால் அப்போ உங்களை அகற்றுவதற்கு Home Office பலவந்த நடவடிக்கை எடுக்கும் இதன் அர்த்தம் உங்களை பலவந்தமாக உங்கள் நாட்டிற்கு அனுப்புதல்

உங்களை UK இல் இருந்து Home Office அகற்ற நினைத்தால் உங்கள் விடயம் Home Office இன் UK Visa and Immigration Department இல் இருந்து Home Office Immigration Enforcement. க்கு மாற்றப்படும்

உங்களை இல் இருந்து அகற்ற இருப்பதாக Immigration Enforcement உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிப்பார்கள் அத்துடன் இம் முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்தவற்கான உங்கள் உரிமை பற்றியும் தெரிவிப்பார்கள் நீங்கள் ஒரு Appeal Rights Exhausted ஆக இருந்து இங்கிருப்பதற்கு எந்தவித சட்ட அடிப்படையும் இல்லாதவர் என்றால் உங்களை பலவந்தமாக வெளியேற்றுவதற்கு ஒரு சட்ட நடைமுறையை பின்பற்ற வேண்டும். உங்களைக் கைது செய்து நிங்கள் நாட்டை விட்டு செல்லும் வரை ஒரு பாதுகாப்பான மையத்தில் தடுத்து வைத்திருத்தல மாற்றீடாக உங்களை அகற்றுவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளும் போது உங்களை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு வரும்படி Immigration Enforcement கேட்கலாம் உங்களை அகற்றுவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளும் அதேசமயத்தில் உங்களை Home Office தடுத்து வைக்கலாம்

## 4B.13 தடுத்து வைத்தலுக்கான சூழல்கள்

உங்களைத் தடுத்து வைப்பதா என் முடிவு செய்கையில் Home Office பின்வரும் விடயங்களை கணக்கில் எடுக்கும் அவையாவன

- உங்கள் முன்னய புடிவரவு வரலாறு
- உங்கள் பூர்வீக நாடு

- உங்கள் தற்காலிக அனுமதியின் நிபந்தனைகள் பிரகாரம் நடந்துள்ளீர்களா (நீங்கள் எப்பொழுதும் IS96 இற்கு ஏற்ப ஆஜர் ஆகியுள்ளீர்களா ?)
- நீங்கள் ஒழிந்து கொள்வதற்கான சாத்தியங்கள்

## 4B.14 நாடு திரும்புவது பாதுகாப்பு அற்றது என தொடர்ந்தும் நான் கருதினால் என்ன நடக்கம்

உங்கள் புகலிடக் கோரிக்கை முழுமையாக விசாரிக்கப் பட்டு அது வெற்றி அளிக்கவில்லை என்றால் உங்களுக்கு வேறு தெரிவுகள் உள்ளனவா என ஆராய அத்துடன் வேறு சமர்ப்பணங்கள் உங்கள் வழக்கு தொடர்பாக செய்லாமா எனப்பார்ப்பதற்கும் சட்ட ஆலோசனை பெறுவது முக்கியம்

உங்கள் சட்ட ஆலேசகரிடம் அது பற்றி கேட்க வேண்டும் உங்கள் வழக்கை மூடும் பொழுது மேலதிக தெரிவுகள் பற்றி அவர்கள் விளக்க வேண்டும்.

Home Office இல் ஒரு புதிய புகலிடக் கோரிக்கை கொடுக்க் கூடியதாக இருக்கும் இதனைச் செய்வதற்கு Home Office க்கு கொடுப்பதற்கு உங்களிடம் மேலதிக ஆதாரங்கள் இருக்க வேண்டும். முன்னர் பரிசீலிக்கப் பட்ட கோரிக்கையில் இருந்து கணிசமாக வித்தியாசப்படும் பதிய கோரிக்கை பற்றி இவ் சமர்பணங்கள் அமையும். கணிசமாக வித்தியாசப் படும் சமர்ப்பணங்கள் என்றால் அதன் உள்ளடக்கம் :

(ை) முன்பே பரிசீலிக்கப் படாதவை அத்துடன்

(ை) நிராகரிக்கப் பட்டிருந்தாலும் கூட முன்னர் பரிசீலிக்கப்பட்ட விடயங்களுடன் சேர்த்துப் பார்க்கையில் வெற்றி வாய்புக்கான சாத்தியங்களை உருவாக்க வல்லதாக இருக்க வேண்டும்

## 4B.15 நான் ஒரு தோல்வியடைந்த புகலிடக் கோரிக்கையாளர் என்றால் கிடைத்த உதவிகள் என்னவாகும்?

உங்களுக்கு புகலிடம் பூரணமாக மறுக்கப் பட்டு 18 வயதுக்கு குறைந்த தங்கியிருப்பவர் எவரும் உங்களுக்கு இல்லை என்பதுடன் Appeal Rights Exhausted (ARE) என்றால் அல்லது உங்கள் புகலிட விண்ணப்பத்தை மீளப்பெற்றால் உங்கள் கோரிக்கை முழுமையாக முடிவு செய்யப் பட்டு 21 நாட்களில் உதவிகளுக்கான எல்லா உரிமைகளையும் இழந்தவர் ஆவீர்கள் Home Officeஇல் இருந்து உங்களுக்க ஒரு கடிதம் கிடைக்கும் அத்துடன் Home Office வழங்கிய தங்குமிடத்தில் வசிப்பவராயின் 7 நாட்களுக்குள் அதை விட்டு வெளியேறுமாறு கேட்கப் படுவீர்கள்

தற்சமயம் 18 வயதுக்கு குறைந்த உங்களில் தங்கியருப்பவர் ஒருவர் உங்கள் வீட்டில் இருந்தால் நீங்களும் உங்கள் குடும்பமும் சுயவிருப்பத்தில் நாடு திரும்பும் வரை அல்லது அகற்றப்படும் வரை அல்லது உங்களில் தங்கி இருப்பவர் 18 வயதை அடையும் வரை Home Office இல் இருந்து பெறும் உதவி தொடரும்

## 4B.16 பிரிவு 4 உதவி

குறுகிய கால உதவி, உங்கள் விண்ணப்பம் வெற்றி அளிக்கவில்லை என்றால்

உங்களுக்கான உதவிகள் நிறுத்தப்பட்டு விட்டால் நாடு திரும்புவதற்கு தயார் ஆகுகையில் குறுகிய கால உதவிக்கு உரித்து உடையவர் ஆவீர்கள் இது பிரி4 இன் உதவி எனப் படும் ஏனெனில் 1999 ம் ஆண்டின் குடிவரவு மற்றும் புகலிடத்துக்கான சட்டத்தின் பிரிவு 4 இன் நிபந்தனைகளின் கீழ் வழங்கப் படுகிறது தேரல்வி அடைந்த புகலிடக் கோரிக்கையாளருக்கு பிரிவு 4 இன் கீழ் உதவி பின்வரும் காரணங்களுக்காக பிரிவு 4 இன் உதவி உங்கள் கோரிக்கையின் போது கிடைத்த உதவியிடம் (பிரிவு 95 )இருந்து வேறுபட்டது

- பண்மாக கொடுக்கப் பட மாட்டாது பண்ம் செலத்தும் அட்டை வடிவத்தில் இந்த உதவி இருக்கும் இது 'Azure' அட்டை என அழைக்கப் படும் இது UK இல் சில குறிப்பிட்ட கடைகளில் மட்டுமே பாவிக்கலாம் - Tesco, Sainsbury, The Co-Operative, Morrisons, Peacocks, Early Learning Centre, Asda, Mothercare, The Red Cross and The Salvation Army.

பிரிவு 4 இன் கீழ் உதவி பெறுவதற்கு நீங்கள் கடும் நிபந்தனைகளை திருப்தி செய்ய வேண்டும். நீங்கள் அனாதாரவான நிலையில் இருந்து பின் வரும் நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை திருப்தி செய்ய வேண்டும்.

1) நீங்கள் UK ஐ விட்டுச் செல்ல சகல நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறீர்கள் அல்லது அவற்றை செய்தற்கான நிலைக்க வருவதற்கு முயலுகிறீர்கள் அல்லது

2) நீங்களோ அல்லது உங்கள் குடும்ப அங்கத்தவரோ உடல் உபாதையின் நிமித்தம் பயணம் செய்ய முடியாது உள்ளீர்கள் அல்லது வேறு மருத்தவக் காரணங்கள் நிமித்தம் UK ஐ விட்டுச் செல்ல முடியாமல் உள்ளீர்கள் அல்லது

3) இராஜாங்கச் செயலாளரின் கருத்துப்படி தற்சமயம் நாடு திரும்புவதற்கு பொருத்தமான பாதை இல்லை என்பதால் நீங்கள் UK ஐ விட்டுச் செல்ல இயலாது அல்லது

4) உங்கள் புகலிடக் கோரிக்கையை நீதிமன்ற மீள்பார்வை செய்யும்படி விண்ணப்பித்து அதற்கான அனுமதி கிடைத்துள்ளது அல்லது

5) 1998 தனித உரிமைகள் சட்டத்தின் பிரகாரம் உங்கள் உரிமைகள் மீறப்படுவதை தடுப்பதற்கான தேவை

**1.** சகல நியாயமான முயற்சிகள்

பிரிவு 4 இன் உதவி பெற இந்த நிபந்தனையின் கீழ் நீங்கள் UK ஐ விட்டுச் செல்ல சகல நியாயமான முயற்சிகளையும் எடுபபதை காட்ட வேண்டும் நீங்கள் உங்கள் முன்னால் உள்ள சகல தெரிவுகளையும் முயற்சி செய்யவில்லை என Home Office நம்பினால் உதவியை மறுக்கலாம் ஒரு குறிப்பட்ட முயற்சி " நியாயமானதா"

இல்லயா என்பது உங்கள் சூழ்நிலையை பொறுத்து இருக்கும். வழமையாக சுயவிருப்பத்தில் நாடு திரும்புவதற்கு ஹோம் ஆபீஸ் இடம் விண்ணப்பம் செய்வீர்கள், உங்கள் நாட்டு தூதராலயத்துடன் தொர்பு கொள்ளவும்

முக்கிய குறிப்பு ஒரு புதிய கோரிக்கையை சமர்ப்பிப்தற்கு அடிப்படைகள் உள்ளன என நீங்கள் நம்பினால், சுயவிருப்பத்தில் நாடு திரும்புவதற்கு விண்ணப்பம் செய்வதற்கு முன்னர் சட்ட ஆலேசனை பெறுவது முக்கியம் சுயவிருப்பத்தில் நாடு திரும்புவதற்கான எந்த விண்ணப்பமும் அது மீள் பெறப்பட்டாலும் கூட உங்கள் புதிய கோரிக்கையைப் பாதிக்கும்.

**2.** பயணம் செய்வதற்கு உடல் ரீதியிலான தடைகள்

இந்த நிபந்தனையின் கீழ் தகுதி பெற ஒரு மருத்துவ நிலைமை காரணமாக பயணம் செய்ய முடியாமல் இருத்தல் வேண்டும். நீங்ளோ அல்லது ஒரு குடும்ப அங்கத்தவரோ உடல் அல்லது மன ஆரோக்கியப் பிரச்னை காரணமாக பயணம் செய்ய முடீயாதவர்களாக உள்ளீர்கள் என Home Office க்கு நிரூபிக்க வேண்டும் நீங்கள் UK இல் மருத்துவ சிகிச்சை பெறுகிறீர்கள் அல்லது உங்கள் மருத்துவரின் கருத்துப் படி நீங்கள் பயணம் செய்யாமல் இருப்பது உசிதம் என்பதைக் காட்டுவது மட்டும் போதாது உங்கள் மருத்துவ நிலைமை காரணமாக நீங்களே அல்லது உங்கள் குடும்பமோ பயணம் செய்ய இயலாது என்பதாக இருக்க வேண்டும்.

“பயணம் செய்வதற்கு உடல் ரீதியிலான தடைகள்” என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள்.

- நீங்கள் பயணம் செய் இயலாது, அதற்கான காரணங்கள் மற்றும் இப்படி எவ்வளவு காலத்துக்கு பயணம் செய்ய முடியாமல் இருக்கம் என்பவற்றை பிரத்தயேகமாக குறிப்பட்டு எழுத்து மூல ஆவணம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- உங்கள் மருத்துவர் ‘Section 4 Medical Declaration’ படிவம் ஒன்றை பூர்த்தி செய்து உங்களக்கு தர வேண்டும். இது Home Office இன் இணையதளத்தில் கிடைக்கும் புகலிடம் உதவி மையத்தை 0808 8000 630 அணுகவும் , அவர்கள் அந்த பாரத்தின் நகலை உங்களுக்கு அனுப்புவார்கள்

பயணம் செய்வதற்கு கர்ப்பம் மற்றும் உடல் ரீதியான தடைகள்

கர்ப்பத்தின் இறுதி நிலையில் உள்ள பெண்கள் ( பிரசவத் திகதிக்கு ஆறு வாரங்கள் இருக்கம் காலம் அல்லது வேறு சிக்கல்கள் இருந்தால் அதற்கு முன்பு ) அல்லது ஆறு வாரங்களுக்கு குறைந்த வயது குழந்தை உள்ளவர்கள் பயணம் செய்ய இயலாதவர்கள் தானியங்கும் விதமாக ஏற்றுக் கொள்ளப் படுவர்

உங்கள் பிரசவத் திகதிக்கு ஆறு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்கின்றீர்கள் என்றால் கர்ப்பத்தை நிரூபிக்கும் தாய்மைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் மற்றும் மருத்துவ பிரகடனம் ஆகியவற்றை கமர்ப்பிக்க வேண்டும்.

**3.** திரும்புவதற்கு பொருத்தமான பாதை இல்லை

இராஜாங்கச் செயலாளரின் கருத்துப்படி தற்சமயம் நாடு திரும்புவதற்கு பொருத்தமான பாதை இல்லை என்பதால் ரும யை விட்டு வெளியேறுவதற்கு இயலாமல் உள்ளவர்க்கு இந்நிபந்தனை பொருத்தமானது உதவி தேவைப் படின்

**4.** நீதிமன்ற மிள் பார்வைக்கான விண்ணப்பம்
உங்களின் அகதிக் கோரிக்கையின் முடிவு தொடர்பாக உங்கள் சட்ட ஆலோசகர் நீதிமன்ற மீள் பார்வைக்கு சமர்ப்பித்திருந்தால் முதலில் இதற்க அனுமதி கேட்டு உயர் நிதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும். உயர் நிதிமன்றம் அனுமதி வழங்கியதும் இந்நிபந்தனையின் கீழ் நீங்கள் பிரிவு 4 உதவி பெறுவதற்க உரித்து உடையவர் நீங்கள் ஸ்காட்லாந்தில் வசிபவராக இருந்து அங்குள்ள நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தால் , நீங்கள் இந்த குறிப்பின் கீழ் பதியலாம்

“நீதிமன்ற மீழ்பார்வைக்கான விண்ணப்பம்” இதை நிரூபிக்க தேவையான ஆதாரங்கள் உயர் நீதிமன்றத்தில் இருந்து மேற்கொண்டு எடுத்துச் செல் அனுமதி வழங்கும் கடிதம் மனு தாக்கல் செய்த உறுதி ஆக்கம் (ஸ்காட்லான்ட் )

**5.** மனித உரிமைகள் மீறல்
அவ்வாறு செய்வது உங்களுக்கு மனித உரிமைகள் மீறலை ஏற்படுத்தும் என்றால Home Office உங்களுக்கான உதவிகளை நிறுத்தி வைக்க முடியாது

சில சூழல்களில் அனாதரவான நிலைமை என்பது ஒருவரின் மனித உரிமை மீறலாக கருதப்பட்டலும் கூட தோல்வி அடைந்த புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் UK ஐ விட்டுச் செல்ல சகல முயற்சிகளையும் எடுக்காமல் இருந்தால் உதவிக்கு உரித்து உடையவர் அல்ல இவர்கள் சுய தெரிவினால் அனாதரவாக உள்ளனர் அதனால் உதவிகளுக்கு உரித்து உடையவர்கள் அல்ல என நீமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது உதவிகள் மறுக்கப் படுவது European Convention of Human Rights (ECHR) கீழ் உரிமைகள் மீறப்படும என்றால் உதவிகளை Home Office வழங்க வேண்டும்

உதாரணமாக நீங்கள் புகலிடத்துக்கு ஒரு புதிய கோரிக்கையை சமர்ப்பித்துள்ளீர்கள் என்றால் அது இன்னமும் நிலுவையில் உள்ளதென்றால் இந்தப் பிரிவின் கீழ் நீங்கள் விண்ணப்பிக்கலாம். ஒரு நீதிமன்ற மீள் பார்வை சமர்ப்பிக்கப் பட்டு ஆனால் முனநகர்வுக்க அனுமதிஇன்னமும் கிடைக்கவில்லை என்றாலும் இதே போன்றுதான் உங்கள் குடும்ப அங்கத்தவர் எவருக்கேனும் உதவி மறுக்கப்படுவதனால் உங்கள் குடும்பம் பிரிந்து போய்விடும் என்றால் இப் பிரிவின் கீழ் விண்ணப்பிக்கலாம். குடும்ப மற்றும் தனிப்பட் வாழ்க்யை பாதுகாக்கும் பாதுகாப்பற்ற மனு ஹோம் ஆபீசிடம் நிலுவையில் இருந்தால் உங்களுக்கு உதவி வளங்குவதிற்கு தடையாக இருக்கும் நீங்கள் வறுமையின் காரணமாக UK விட்டு வெளியேற தடையாக இது கருதபடாது

உங்களுடைய வீட்டிற்கு திரும்பி போக இயலாத புதிய நியாமான சாட்சி காரணங்கள் இருந்தால் ஒரு சட்ட பிரதிநிதி உங்களுக்கு உதவுவார்

- மனித உரிமைகள் மீறல்” ஐ நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் இவை அடங்கலாக:

- பதிய கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப் பட்டு உள்ளது என்பதை ஊர்ஜிதம் செய்தல்
- பிறப்பு சான்றிதழ்கள், குடும்ப வாழ்க்கை பற்றிய ஆதாரங்கள்
- உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் பட்டவைகளின் பிரதி குறிப்பு 4 குறித்து மேலும் அறிவுரை தேவைபட்டால் அல்லது சட்ட பிரதிநிதிகளை குறித்து உதவி தேவைபட்டால் , தயவு செய்து புகலிடம் உதவி யை நாடுங்கள் 0808 8000 630.

## 4B.17 நான் அனாதரவான நிலையில் உள்ளேன் என்பதை நரூபிக்க நான் என்ன செய்ய வேண்டும் ?

இப்போ அல்லது அடுத்த 14 நாட்களில˙“உங்களுக்கு போதுமான தங்குமிடம் இல்லை” அல்லது உங்கள் “ அத்தியாவசிய வாழ்க்கைத் தேவைகளை “ (உணவு, வெளிச்சம் மற்றும் வெப்பம்) பெறுவதற்க வசதி அற்றவர் என்றால் Home Office உங்களை அனாதாரவானவர் எனக் கருதும்.

தற்சமயம் “வீதியில் இருக்கும் “வீடற்றவர் அல்லது அப்படி ஆகும் நிலைமைக்கு வரும் அபாயம் உள்ளது என்பதைக் காட்ட வேண்டும். ˙“உங்களுக்கு போதுமான தங்குமிடம் இல்லை” அல்லது அடுத்த 14 நாட்களில உங்கள் “ அத்தியாவசிய வாழ்க்கைத் தேவைகளை பெறுவதற்கு வசதி அற்றவர் என்பதற்கான ஆதாரங்கள் கொடுத்தால் போதுமானது உங்களது வறுமையை குறித்து சோதனை நடத்தும் போது சில நேரம் மேலும் விபரங்கள் விண்ணப்பதாரரிடம் இருந்து தேவை படலாம்

:”அனாதாரவை” நிரூபிப்பதற்கான ஆதாரங்கள்

- உதவி நிறத்தப் பட்ட பின் நீங்கள் தங்கியிருந்த விலாசங்களின் பட்டியல் அதனுடன் ஒவ்வொரு விலாசத்தில் எவ்வளவு காலம் தங்கியிருந்தீர்கள் எனற விபரங்கள் அத்துடன் என்ன உதவிகள் தொடர முடியாது என்பதையும் கொடுக்க வேண்டும்.
- மிக அண்மையில் தங்கியிருந்த இடம் பற்றிய ஆதாரங்கள், எங்கு இந்த தங்குமிடம் உள்ளது மற்றும் ஏன் இதில் தொடர்ந்து தங்க முடீயாது (நண்பர் அல்லது உறவினரிடம் இருந்து கடிதம்) கடந்த ஆறு மாத குறிப்புக்கள் முழுமையாக தேவை
- வெளியேற்ற அறிவத்தல் எனயவை
- தர்மஸ்தாபனங்களில் இருந்து பெற்ற உதவிகள் பற்றிய ஆதாரங்கள் அல்லது இவற்றை பெற செய்த முயற்சிகளுக்கான ஆதாரங்கள்
- கடந்த ஆறு மாதங்களுக்கான வங்கி அறிக்கைகளின் பிரதிகள்(இருந்தால்)
- நீங்கள் ஒரு தனிப் பெற்றோர் என்றால் குழந்தையின் தந்தையிடம் இருந்த பராமரிப்புத் தொகை பெற முயற்சித்தற்கான ஆதாரங்கள்
- உங்களுக்கு முன்னர் வேலை செய்வதற்கு அனுமதி இருந்தால் அல்லது சட்ட

விரோதமாக வேலை செய்து இருந்தால் உங்களிடம் இறுதி °60 யை கேட்கலாம் அத்துடன் அல்லது சம்பளத் துண்டுகள் அதனுடன் மேலும் நீங்கள் வேலை செய்யவில்லை அல்லது வேலை செய்ய அனமதி இல்லை என்பதற்கான ஆதாரங்கள் இவற்றையும் கேட்கலாம்

- நீங்கள் தனியார் வாடகை குடியிருப்பில் வசிப்பவர் என்றால் வாடகை ஒப்பந்தம் மற்றும் இடத்தை விட்டுச் செல்லுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்
- நிங்கள் முன்னர் பிரதான நீரோட்ட உதவி பெற்றவராயின் அதற்கு மேல் கொண்டு உரித்து அற்றவர் என்பதற்கான ஆதாரங்கள்( உதாரணமாக னுறுீ யில் இருந்து ஒரு கடிதம்)
- உங்களது முன்னய உதவிகள் நிறுத்தப் பட்ட பின்னர் நீங்கள் எவ்வாறு உயிர் வாழ்ந்தீர்கள் என்பது பற்றி ஒரு தனிப்பட்ட அறிக்கை தயார் செய்தால் பரயோசனமாக இருக்கும். தேவையான தகவல்களைப் பெறுவதில் சிரமம் உள்ளவர்களுக்கு இது முக்கியமாக இருக்கும்

## 4B.18 பிரிவு 4 க்கு கீழ் உதவிக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?

பிரிவு 4 க்கு கீழான உதவி ( தகுதி அடங்கலாக) பற்றி மேலதிக ஆலோசனை மற்றும் தகவல்கள் தேவை எனின் Asylum Advice UK 0808 8000 642 ஐ தொடர்பு கொள்ள வேண்டும்

பிரிவு 4 க்கு கீழான உதவிக்கு விண்ணப்பிக்க ஏற்கனவே முடீவு செய்து உதவி விண்ணப்பப் படிவம் தொடர்பாக உதவி தேவைப்படுமானால் Asylum Help ஐ தொடர்பு கெள்ளவும் Asylum Support Application UK ஐ(www.asylumhelpuk.orgஇல் அல்லது Asylum Support Applications) ஐ 0808 0808 8000 643இல் www.asylumhelpuk.org பார்வையிடுங்கள; உதவிக்கு விண்ணப்பிக்கையில் சகல தேவையான ஆதாரங்களையும் வைத்திருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்

முக்கிய தகவல் Home Office இதனைச் செய்திருக்கும் வரையில் உங்களுக்கு உதவிக்கு உரிமை இல்லாதிருக்கும் உங்கள் விண்ணப்பத்தை பரிசீலிக்கும் வரை

புகலிட உதவி மையம் உங்கள் மனு ஆதரவுக்கு உதவி செய்யும் ஆனால் உங்களது வறுமையின் ஆதாரங்களை சமர்பிக்க வேண்டும் , அத்துடன் நீங்கள் அந்த நிலைமையில் இருக்கிறீர்கள் என்று உறுதி செய்யவேண்டும்

ๅ நீங்கள் உதவி பெற தகுதி ஆனவர்களா என்று ஹோம் ஆபீசிக்கு தேவைப்படும் சாட்சியங்களை கொடுக்க புகலிட உதவி மையம் தனி நபரின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை குறித்த விபரங்களை சேர்க்கும் . அதனை பெற்றுக்கொண்ட பிறகு உங்களது ஆதரவுக்கான மனுவிற்கு உதவுவோம் . ஒருவேளை ஹோம் ஆபீஸ் நீங்கள் வறுமையில் இல்லை என்றோ அல்லது நீங்கள் வறுமை கோட்டிற்கு கீழ் இல்லை என்றோ உணர்ந்தால் , உங்கள் மனுவை நிராகரிக்கவோ அல்லது மேலும் விபரங்களின் சாட்சியங்களையோ கேட்கலாம்

ஹோம் ஆபீஸ் கேட்கும் சாட்சியங்களை கொடுக்க தவறினால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்காமல் மனுவை முடிவுக்கு கொண்டுவரும்

## 4B.19 பிரிவு 4க்கு கீழான உதவின் மேன்முறையீடு

பிரிவு 4க்கு கீழான உதவிக்கான உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டால் First-tier Tribunal (Asylum Support).இல் மேன்முறையீடு செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது உதவியை மறுத்து உங்களுக்கு வுாந Home Office கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கும் உதவி மறுத்ததற்கான காரணங்கள் அடிப்படைகளை அக்கடிதம் விளக்கும் முடிவு எடுக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று வேலைநாட்களுக்குள் மேன்முறையீடு செய்யப்பட வேண்டும் மேன்முறையீடு தொடர்பான உதவிக்கு முடிந்த அளவு விரைவாக ஐ தொடர்ப கொள்ள வேண்டும். Asylum Advice UK ஐ www.asylumhelpuk.org இல் அல்லது Asylum Helpline ஐ 0808 8000 642 .இல் மேல் முறையீடு செய்ய வழிகள் இருந்தால் அதை குறித்து புகலிட உதவி மையம் உறுதி செய்யும் அதோடு உங்களுடன் சேர்ந்து உங்கள் விருப்பங்களையும் அறிந்து கொள்ளும்.

மேலும் விபரங்கள் அறிந்து கொள்ள புகலிட உதவி மேல் முறையீடு திட்டத்தை பாருங்கள் www.asaproject.org

## 4B.20 சூழ்நிலையில் மாற்றங்கள்

Home Office நீதிமன்றம் மற்றும் உங்கள் சட்ட ஆலோசகர் ( உங்களுக் ஒருவர் இருந்தால்) உங்கள் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் அது உங்கள் வழக்கைப் பாதிக்கும் உங்கள் விலாச மாற்றங்களை அவர்களுக்கு தெரிவிக்கத் தவறினால் முக்கியமான கடிதங்கள் தவறிப் போய்விடக் கூடும் உங்களுக்கு குழந்தை பிறந்தால் அதை தெரிவிக்கத் தவறினால் உங்கள் புகலிட விண்ணப்பத்தில் அக்குழந்தை இணைக்கப்டாமல் போய்விடும். பின்வருவனவற்றை Home Office க்கு தெரிவிக்க வேண்டும்

- உங்கள் பெயர் மாற்றம்
- உங்களில் தங்கியிருப்பவர்களில் எவரேனும் 18 வயதை அடைந்து விட்டனர்
- வேறு விலாசத்துக்கு மாறி உள்ளீர்கள்
- திருமணம் அல்லது விவாக ரத்து வெய்துள்ளீர்கள் அல்லது உங்களை துணையிடம் இருந்து பிரிந்து உள்ளளீர்கள்
- மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளீர்கள்
- நீங்களோ அல்லது உங்கள் துணையோ கர்ப்பம் உள்ளீர்கள் அல்து குழந்தை பெற்றுள்ளீர்கள்
- உங்கள் குழந்தைகளில் எவரேனும் பாடசாலையையோ அல்லது வீட்டையோ விட்டு விலகுதல்.
- ஐக்கிய ராச்சியத்தில் குடும்ப அங்கத்தவர் எவரேனும் உங்களுடன் இணைதல்

அல்லது பிரிந்து போதல்.

- வேறு எவரேனும் தங்குமிடத்தில் உங்களுடன் இணைதல் அல்லது விட்டு விலகுதல்.
- உங்களை சிறையில் அடைத்தல்
- ஏற்கனவே குறிப்பிடாத பண வரவு அல்லது பணம் பெறும் வாய்ப்பு
- ஏதாவது ஒன்றின் விற்பனை மூலம் பண வரவு அல்லது பணம் பெறும் வாய்ப்பு அல்லது
- நாங்கள் உங்களுக்கு தங்கமிடம் வழங்குவதை இனி விரும்பவில்லை

மேற்கூறியவை உங்கள் புகலிட உதவிகள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் அல்லது நீதிமன்றம் மற்றும் உங்கள் சட்ட ஆலோசகருக்கு கூறவேண்டும்

நீங்கள் உதவி பெற தகுதி ஆனவர்களா என்று ஹோம் ஆபீசிக்கு தேவைப்படும் சாட்சியங்களை கொடுக்க புகலிட உதவி மையம் தனி நபரின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை குறித்த விபரங்களை சேர்க்கும் . அதனை பெற்றுக்கொண்ட பிறகு உங்களது ஆதரவுக்கான மனுவிற்கு உதவுவோம் . ஒருவேளை ஹோம் ஆபீஸ் நீங்கள் வறுமையில் இல்லை என்றோ அல்லது நீங்கள் வறுமை கோட்டிற்கு கீழ் இல்லை என்றோ உணர்ந்தால் , உங்கள் மனுவை நிராகரிக்கவோ அல்லது மேலும் விபரங்களின் சாட்சியங்களையோ கேட்கலாம் .

புகலிட உதவிகள் குறித்து அல்லது சட்ட அறிவுரை பெறுவதற்கு தகவல்களுக்கு தயவு செய்து Asylum Help. உடன் தொடர்பு கொள்ளவும்

www.asylumhelpuk.org

Asylum Advice UK 0808 8000 642
Asylum Support Applications UK 0808 8000 643